**மாவட்ட உரிமையியல் மற்றும்  நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**பரங்கிப்பேட்டை.**
**அசல் வழக்கு எண். 16/2009**

The Oaths Act 1969 (Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 05.03.2026-ஆம் நாளாகிய இன்று மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திரு.த.யுவராஜ் அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 05.03.2026 | சாட்சி | வா.சா.2 |
| பெயர் | மகேந்திரன் | வயது. | 63 |
| த.பெ. | வேணுசாமி | | |

**2 முதல் 4-ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -**

1) என்னுடைய பூர்வீக கிராமம் மீதிக்குடி. நான் விவசாய தொழில் செய்கிறேன். மீதிக்குடி கிராமத்திற்கும், கொத்தட்டை கிராமத்திற்கும் சுமார் 25 கி.மீ இருக்குமா என்றால் இருக்கும். குப்புசாமி எனக்கு எப்படி அறிமுகம் என்றால் மீதிக்குடி கிராமத்தில் EB Office- line Man ஆக இருந்ததால் அறிமுகம். எந்த வருடத்திலிருந்து எந்த வருடம் வரை பணி புரிந்தார் என்றால் எந்த வருடம் என்று குறிப்பிட்டு தெரியாது. சுமார் 1 வருடம் பணியில் இருந்தார். குப்புசாமி EB Office- line Man என்ற வகையில் மட்டும் தான் எனக்கு அறிமுகம் என்றால் சரிதான். குப்புசாமியின் மனைவி பெயர் தெரியுமா என்றால் தெரியாது. குப்புசாமிக்கு எத்தனை குழந்தைகள் என்று எனக்கு தெரியாது. குப்புசாமிக்கு எவ்வளவு சொத்துக்கள் உள்ளது என்று தெரியுமா என்றால் 25 சென்ட் நிலம் இருப்பது மட்டும் தெரியும் மற்றது குறித்து தெரியாது. நான் சொல்லும் 25 சென்ட் சொத்தானது இவ்வழக்கிற்குரிய சொத்தா என்றால் ஆமாம். மேற்படி 25 சென்ட் சொத்தை தவிர குப்புசாமிக்கு வேறு என்ன சொத்துக்கள் இருக்கிறது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

2) கொத்தட்டை கிராமத்திற்கும், புதுச்சத்திற்கும் சுமார் 3 கி.மீ இருக்குமா என்றால் இருக்கும். கொத்தட்டை கிராமத்திலிருந்து பரங்கிப்பேட்டை சுமார் 6 கி.மீ இருக்கும் என்றால் சரிதான். புதுச்சத்திரம் மற்றும் பரங்கிப்பேட்டையில் சார்பதிவாளர் அலுவலகம் உள்ளது என்றாலும் அங்கு பத்திர எழுத்தர் உள்ளனர் என்றாலும் சரிதான். சிதம்பரத்தில் உள்ள காந்தி சிலைக்கும் சிதம்பரம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கும் சுமார் 2 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். சிதம்பரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எழுத்தர்கள் அதிகம் உள்ளனர் என்றால் சரிதான். குப்புசாமி எப்பொழுது பணி ஓய்வு பெற்றார் என்று தெரியுமா என்றால் தெரியாது. 2007-ம் ஆண்டு குப்புசாமி பணியில் இருந்தாரா அல்லது ஓய்வு பெற்றுவிட்டாரா என்றால் பணியில் தான் இருந்தார். 2007-ம் ஆண்டு எந்த EB Office-ல் குப்புசாமி வேலை செய்தார் என்றால் சிதம்பரத்தில் வேலை செய்தார்.

சிதம்பரத்திலுள்ள EB Office-ற்கு சிதம்பரம் சார்பதிவாளர் அலுவலகத்தை தாண்டி தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 விற்பனை உடன்படிக்கைக்கான பத்திரத்தை யார் வாங்கி வந்தது என்றால் சின்னப்பா மற்றும் ரமேஷ் ஆகியோர் வாங்கி வந்தனர். ரமேஷ் வாதி கலியமூர்த்தியின் மகன். வா.சா.ஆ.1 ஆவணத்திற்கான முத்திரைதாள் சிதம்பரத்தில் வாங்கப்பட்டதா என்றால் இல்லை, புவனகிரியில் வாங்கப்பட்டது. சிதம்பரம் காந்தி சிலையிலிருந்து புவனகிரி சார்பதிவாளர் அலுவலகம் சுமார் 10 கி.மீ இருக்குமா என்றால் சுமார் 7 கி.மீ இருக்கும்.

3) எப்போது வா.சா.ஆ.1ற்கான முத்திரை தாள் வாங்கப்பட்டது என்றால் பத்திரம் எழுதப்பட்ட அன்று மாலையில் முத்திரை தாள் வாங்கப்பட்டது. பத்திரம் எழுதப்பட்டதற்கான ஆவணங்கள் என்னென்ன இருந்தது என்று தெரியுமா என்றால் குப்புசாமி ஒரு பேப்பரை மட்டும் வைத்திருந்தார். முதலில் எதில் வைத்து என்ன எழுதினார்கள் என்றால் வைத்திருந்த வெள்ளை பேப்பரில் பத்திரத்திற்கான சொத்துவிபரங்களை எழுதினார்கள். பத்திரம் எழுதிய சொத்திற்கான புல எண் தெரியுமா என்றால் புல எண் தெரியாது, ஆனால் 2 Item சொத்துகள் குறித்து எழுதப்பட்டது. மேற்படி 2 Item சொத்துகளுக்கான பரப்பு சென்டில் அல்லது சதுரத்தில் சொன்னார்களா என்றால் 1000 மீட்டர் என்று சொன்னார்கள். சொத்தின் சக்குபந்தி குறிப்பிட்டது குறித்து தெரியுமா என்றால் அதையெல்லாம் நான் படித்து பார்க்கவில்லை தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணம் எத்தனை பக்கங்களாக எழுதப்பட்டது என்றால் 3 பக்கங்களாக எழுதப்பட்டது.

4) 1-ம் வாதி கலியமூர்த்தி எனக்கு பழக்கமானவரா என்றால் பழக்கமானவர் தான் சிதம்பரம் காந்தி சிலை அருகில் உள்ள இனிப்பு பலகார கடை மூலமாக பழக்கம். ஆவணம் எழுதப்பட்ட காலத்திற்கு 3 வருடங்களுக்கு முன்பிலிருந்து பழக்கம். வா.சா.ஆ.1 விற்பனை உடன்படிக்கை எழுதப்படுவது குறித்து கலியமூர்த்தி என்னிடம் ஏதேனும் சொல்லியிருந்தாரா என்றால் இல்லை. கலியமூர்த்தி அவருடைய கையொப்பத்தை தமிழில் போடுவாரா அல்லது ஆங்கிலத்தில் போடுவாரா என்றால் தமிழில் போடுவார். கலியமூர்த்தியின் பெயருக்கு முன்பு Initial தமிழில் போடுவாரா அல்லது ஆங்கிலத்தில் போடுவாரா என்றால் ஆங்கிலத்தில் போடுவார். குப்புசாமி அவருடைய கையொப்பத்தை தமிழில் போடுவாரா அல்லது ஆங்கிலத்தில் போடுவாரா என்றால் தமிழில் போடுவார். குப்புசாமியின் பெயருக்கு முன்பு Initial தமிழில் போடுவாரா அல்லது ஆங்கிலத்தில் போடுவாரா என்றால் ஆங்கிலத்தில் போடுவார்.

5) சின்னப்பா தற்போது உயிருடன் உள்ளாரா என்றால் இல்லை. அவர் இறந்து 3 வருடங்கள் ஆகிறது. சின்னப்பா இறந்து வருடம், மாதம், தேதி குறிப்பிட்டு தெரியுமா என்றால் தெரியாது. 3 வருடங்களுக்கு முன்பு இறந்த சின்னப்பாவின் இறந்த தேதி சரியாக தெரியாத போது 19 வருடங்களுக்கு முன்பு எழுதப்பட்ட இவ்வழக்கின் வா.சா.ஆ-1 ஆவணத்தின் தேதி மட்டும் எப்படி தெரியும் என்றால் நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததற்கு பிறகு 3-ம் வாதியான ரமேஷிடம் சென்று வழக்கு சம்மந்தமாக கேட்டபோது அவர் அவரின் வழக்கறிஞரிடம் அழைத்து சென்றார் அங்கு நான் பத்திரத்தில் கையொப்பமிட்டதால் நீதிமன்ற விசாரணைக்கு அழைப்பதாக சொன்னார்கள். 3-ம்

வாதி ரமேஷ் மற்றும் அவரின் வழக்கறிஞர் சொன்னதற்கு பிறகு தான் வா.சா.ஆ.1 ஆவணத்தை குறித்து எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. எனக்கு ஆவணம் எழுதப்பட்டது குறித்து முன்பே தெரியும். நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்த பிறகு நான் நேரடியாக நீதிமன்றத்திற்கு வந்து அழைப்பாணை கொடுத்த வழக்கறிஞர் விசாரணை வாயிலாக எனது சாட்சியம் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. நான் என்னுடைய வாக்குமூலத்தை சொன்னேன். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை 3-ம் வாதி ரமேஷின் வழக்கறிஞர் தயார் செய்து வைத்ததில் நான் கையொப்பம் மட்டும் போட்டேன் என்றால் சரியல்ல. அதிலுள்ள விபரங்கள் நான் சொல்லி தயாரிக்கப்பட்டு பின்பு தான் கையொப்பம் போட்டேன். நீதிமன்ற அழைப்பாணை வந்த பிறகு என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை யாரிடம் சொன்னேன் என்றால் வழக்கறிஞரிடன் சொன்னேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பத்தை எங்கு வைத்து போட்டேன் என்றால் பரங்கிப்பேட்டையில் போட்டேன். குப்புசாமியை பார்த்து சுமார் எத்தனை வருடங்கள் இருக்குமென்றால் வழக்கின் பத்திரம் எழுதும்போது பார்த்தேன் அதன்பிறகு சுமார் 2 வருடங்களில் பார்த்திருப்பேன். அதற்குபிறகு பார்க்கவில்லை.

6) வா.சா.ஆ-1 ஆவணத்தை தவிர வேறு ஆவணங்களில் சாட்சி கையொப்பம் போட்டுள்ளேனா என்றால் இல்லை. என் குடும்பம் மற்றும் நண்பர்கள் சார்ந்த சொத்து சம்மந்தமான ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அவ்வாறான ஆவணங்களில் ஆவணத்தை எழுதியவரின் பெயர், தட்டச்சு செய்தவரின் பெயர், ஆவணத்தை தயார்செய்தவரின் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில், ஆவணத்தை தயார்செய்தவர் பெயர், தட்டச்சு செய்தவரின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. ஆவணம் பொதுவாக சார்பதிவாளர் அலுவலகத்தின் அருகே உள்ள ஆவண எழுத்தர் மூலமாக தான் எழுதப்படும் என்றால் சரிதான். பிரதிவாதி குப்புசாமி மின்சார வாரியத்தில் பணிபுரிந்து நல்ல விபரம் தெரிந்த நபராக இருப்பதால் அவர் சிதம்பரம் காந்தி சிலை இனிப்பு பலகார கடையில் வைத்து வா.சா.ஆ.1 ஆவணத்தை எழுத வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. 1-ம் வாதி கலியமூர்த்தி, 3-ம் வாதி ரமேஷ் மற்றும் சின்னப்பா ஆகியோருடன் சதி செய்து வா.சா.ஆ.1 ஆவணம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கலியமூர்த்தியின் இனிப்பு பலகார கடைக்கு அடிக்கடி சென்று வந்ததால் என் துணையோடு வா.சா.ஆ.1 ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் மோசடியானது என்பதால் தான் நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்த பிறகு 3-ம் வாதியை சந்தித்து அவரின் அறிவுறுத்தலின்படி என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 3-ம் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

(S/D.Thiru.D. Yuvaraj)
District Munsif cum Judicial Magistrete,
Portonovo.